# கிறிஸ்து மீண்டும் வருவது மிகவும் சிறந்தது




## 5.9 கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம்

**வேத வசனம்:** **நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.**
*யோவான் 14:3*

**அறிக்கை:** **தேவனுடைய வருகைக்காய் காத்திருப்போருக்குக் கிரீடம் தருவார்**



**சத்தியம்:** சோதனைகளைச் சகித்துக்கொண்டே கிறிஸ்துவின் வருகைக்காய்க் காத்திருக்கிற வர்கள் ஆசீர்வதிக்கப்படுவது நிச்சயம். தம்மை நேசிப்பவர்களுக்காய்த் தேவன் வாக்களித்த ஜீவக்கிரீடத்தை அவர்கள் சுதந்தரிப்பார்கள்.

### வேத பகுதி: மத்தேயு 25:1-13., வெளி. 22:6-21

**பாடம்**

**1. கர்த்தருடைய துரித வரவை அறிதல்:** கர்த்தர் இயேசு மிகச் சீக்கிரம் வரப்போகிறார். அது எப்போது நடைபெறும்? வேதபுத்தகம் சொல்லுகிறது "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்." தேவன் சொல்லுகிறார் "ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." அந்த நேரத்தில் மனந்திரும்புதலுக்காகக் கதறுவது மிகத் தாமதமானச் செயல். "நாளைப் பார்க்கலாம்" மற்றும் "இப்போது உடனடியாக செய்யவேண்டியது இல்லை" என்றெல்லாம் மனிதர்கள் சிந்திக்கிறார்கள். நாம் எப்போதும் கவனமாக இருந்து அவரைச் சந்திக்க ஆயத்தப்படவேண்டும். (மத். 24:36-42, 1 கொரி. 15:50-52)

**2. பரிசுத்தத்திற்காய்ப் பிரித்தெடுக்கப்பட்டிருத்தல்:** பத்து கன்னிகைகள் உவமையில் ஐந்துபேர் மணவாளன் விருப்பத்திற்கிணங்க தங்களை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்கள். அவர்கள் மணவாளனை வரவேற்க அதிக எண்ணெயை தயாராக வைத்திருந்தனர். மறுபக்கத்தில், அடுத்த ஐந்துபேர் புத்தியற்றவர் கள். அவர்கள் தங்களுக்கு தோன்றியதைச் செய்தார்கள். அதற்கு பதிலாக மணவாளன் "உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சொல்லி விரட்டிவிட்டார். "மாமிசசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்." என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் புத்தியுள்ள கன்னிகைகள் போல் பரிசுத்தத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து மணவாளனுடைய வருகைக்காக ஆயத்தமாக காத்திருக்கவேண்டும். (மத்தேயு 25:11-13., ரோமர் 8:6)

**3. ஒருவருக்கொருவர் தயவாயிருத்தல்:** ஆண்டவர் இயேசு தமது திருச்சபையை ஏற்றுக்கொள்ள விரைந்து வருகிறார். அவரது திருச்சபை அன்பும் ஒற்றுமையும் உடைய பரிசுத்தமும், வல்லமையும் நிறைந்தது. ஆகையால் நாம் ஒருவருக்கொருவர் மனத்தாழ்மையும் கண்ணியமும் உள்ளவர்களாய் ஒருவரை ஒருவர் மன்னித்து ஒருவருக்கொருவர் தயவாயிருக்க வேண்டும். தேவன் அன்பானவர். நாம் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி பிறர் வாழ்வை கட்டியெழுப்ப வேண்டும். அவ்விதம் செய்வதால் நாம் தேவ ஆவியால் நடத்தப்பட்டு அவர் சித்தப்படி வாழுகிறோம். (எபே. 4:2,32., 1 யோவான் 4:16)

**4. கர்த்தருக்கு நல்ல சாட்சிகளாயிருத்தல்:** இறுதி நாளில் "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்." அது ஒரு மகிமையும் நடுக்கமும் உள்ள நாள். வேதம் சொல்லுகிறது, "முழுங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும்" ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பாக தங்களுடைய கணக்கை ஒப்புவிப்பார்கள். ஆகையால், பிறர் சத்தியத்திற்குள் வருவதற்கும் தேவனை சந்திக்க ஆயத்தப்படவும்படியாய் நாம் தேவனுடைய நற்சாட்சிகளாக வாழவேண்டும். (1 தெச. 4:16-17., யோவான் 8:32., ரோமர் 14:11-12)

**முடிவுரை:** ஆண்டவர் இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபின் எருசலேமிலிருந்து பரமேறினார் என்று வேதம் குறிப்பிடுகிறது. அதுபோலவே அவர் உலகத்திற்கு திரும்பவும் வருவார். (அப். 1:9-11) அவர் திருடனைப்போல ஒருவரும் அறியாத நேரத்தில் வருவார் என்றும் வேதம் கூறுகிறது. அவரை விசுவாசிக்கும் நாமோ இருளில் நடவாமல் ஒளியில் நடந்து அவருக்கு சாட்சிகளாக வாழுவோம். அவரை நேசிப்பவர்களுக்கும் அவரை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கும் தேவன் மகிமையான கிரீடம் தருவேன் என்று வாக்களித்திருக்கிறார்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.